# என் வாழ்க்கையை மாற்றும்



மிகேல்

அக்டோபர் 17, வாரம் 3

**ஃபின்லாந்து**



- நீர் உண்மையிலேயே இருந்தால், என் வாழ்க்கையை மாற்றும்' என்று அந்த பதின்மவயது வாலிபன் ஜெபித்தான். அவன் சில பழக்கங்களிலிருந்து விடுபட முடியாமல் தவித்து, மனச்சோர்வடைந்த நிலையில் இருந்தான்.
- ஃபின்லாந்தில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்ந்தான் **மிகேல்**. அவர்கள் அவனது அப்பா வழியில் நான்காவது தலைமுறை செவந்த்-டே அட்வென்டிஸ்ட் குடும்பத்தினர். மிகேலின் தந்தைக்கும் தாய்க்கும் திருமணமாகி சில காலத்திற்குப் பிறகு, அவனது தாய் ஒரு சுவிசேஷக் கூட்டத்தின்மூலம் இந்த அட்வென்டிஸ்ட் சத்தியத்தைப்பற்றி அறிந்தார். அதன்பின் அவர் கர்ப்பமானதும், 'இந்தக் குழந்தையை உமது பணிக்காக நான் அர்ப்பணிக்கிறேன்' என்று அமைதியாக ஒரு பொருத்தனை பண்ணினார்.
- மிகேல் அந்த அர்ப்பணிப்பை முழுமையாகப் புரிந்துகொள்ளாவிட்டாலும், சிறுவனாக இருந்தபோதே, அதை ஆழமாக உணர்ந்திருந்தான். அவனுக்கு மூன்று வயதாக இருந்தபோது, தன் வீட்டு வரவேற்பறையில் ஒரு போதகர் போல நடித்து, 'வீட்டு சபை' ஆராதனைகளை நடத்தியிருக்கிறான். தனது 11 வது வயதில் ஞானஸ்நானம் பெற்றான். தேவனுடைய வழிநடத்துதலை தன் வாழ்வில் உணர்ந்தான்.



- ஆனால், சில காலத்திற்குப் பிறகு, அவனுடைய குடும்பத்தினர் ஃபின்லாந்தின் ஒரு கிராமப்புற பகுதிக்குக் குடிபெயர்ந்தனர். அங்கிருந்த அட்வென்டிஸ்ட் திருச்சபை மிகவும் சிறியது. இதனால், ஒரு விசுவாசியாகவும், ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவராகவும் தனக்கு யாருமே இல்லாததுபோல மிகேல் உணர்ந்தான்.
- தனக்கும் சொந்தப் பந்தங்கள் வேண்டும் என்கிற ஏக்கத்தில், தனது ஆரம்பக்கால பதின் பருவத்திலேயே புகைபிடிக்கவும், மது அருந்தவும், கேளிக்கை விருந்துகளுக்குச் செல்லவும் ஆரம்பித்தான். வார இறுதி நாட்களை பெரும்பாலும் குடியும் கும்மாளமுமாகக் கழித்தான்; சில ஓய்வுநாட்களில் மதுவால் உண்டான தலைவலியோடு திருச்சபையின் பின்வரிசையில் அமர்ந்திருப்பான். தேவன்மீதான விசுவாசத்தை அவன் ஒருபோதும் கைவிடவில்லை, ஆனாலும் விசுவாசத்திற்கும் உலக ஆசைகளின் ஈர்ப்பிற்கும் இடையே சிக்கி தவித்துக்கொண்டிருந்தான்.
- அட்வென்டிஸ்ட் கோடைகால முகாம்கள் அவனது வாழ்க்கைக்கு ஒரு புதிய நம்பிக்கையைத் தந்தன. ஒவ்வொரு ஆண்டும், மிகேல் தேவனை நோக்கி இழுக்கப்பட்டான். ஆனால், மீண்டும் பள்ளிக்குத் திரும்பியபிறகு, தனது பழக்கங்களை மாற்றுவதற்கு அவனுடைய சுயக்கட்டுப்பாடு மட்டும் போதுமானதாக இருக்கவில்லை.



- 15 வயதை எட்டியபோது, அவனுடைய போராட்டம் மிகமோசமான நிலையை அடைந்தது. "நான் மிகவும் வருத்தப்படக்கூடிய சில முடிவுகளை எடுத்தேன், அது ஒரு ஆவிக்குரிய போர்போல எனக்குத் தோன்றியது" என்று சொன்னான்.
- ஒரு முகாம் கூட்டத்தின்போது, அங்கு வந்திருந்த ஒரு சிறப்புப் பேச்சாளர் தனது வாழ்க்கை மாறினதுபற்றிய சாட்சியைப் பகிர்ந்துகொண்டார். கடைசி வரிசையில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்த மிகேல், "எனக்கு 25 வயதாகும்போது, என் வாழ்க்கையைச் சரி செய்துவிடுவேன்' என்று தனக்குள் நினைத்துக்கொண்டான். குழப்பங்களுக்கு மத்தியிலும், தனக்கு ஓர் அழைப்பு கொடுக்கப்படுவதை உள்ளுக்குள் உணர்ந்தான். அது தன்னால் முழுமையாக விளக்கமுடியாத, ஆனால், தவிர்க்க முடியாத ஓர் அழைப்பாக இருந்தது.
- சுயக்கட்டுப்பாட்டின்மூலம் அந்தத் திருப்புமுனை வரவில்லை, மாறாக தேவனிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்ததன் மூலமே வந்தது. ஒரு வார இறுதியில், ஒரு கேளிக்கை விருந்தில் கலந்துகொண்டு, நள்ளிரவு நேரத்தில் ஒரு ரயில் நிலையத்தில், அங்கிருந்த கண்ணாடியில் தன் பிம்பம் பிரதிபலிக்கப்பட்டதைப் பார்த்து, 'நான் யாராக மாறிக்கொண்டிருக்கிறேன்?' என்று தனக்குள்ளே கேட்டுக்கொண்டான்.



- விடுதி அறைக்குத் திரும்பிய பிறகு, ‘தேவனே, எனக்கு இந்த வாழ்க்கைமுறை பிடித்திருக்கிறது. இதை மாற்றிக் கொள்ளக்கூட எனக்கு விருப்பமில்லை. ஆனால், நீர் விரும்பினால், என் வாழ்க்கையை மாற்ற உங்களுக்கு அனுமதி தருகிறேன்’ என்று மனதின் ஆழத்திலிருந்து ஜெபித்தான்.
- அதற்கு சில நாட்களுக்கு பிறகு, ‘நீர் உண்மையிலேயே இருந்தால், என் வாழ்க்கையை மாற்றும்’ என்று மீண்டும் ஒருமுறை ஜெபித்தான். அப்படி ஜெபித்ததும், புத்துணர்வூட்டும் உணர்ச்சிப்பெருக்கை தேவன் கொடுத்துவிடவில்லை; மாறாக, அமைதியாக அவனுக்குள் ஒரு மாற்றத்தை உருவாக்க ஆரம்பித்தார். மிகேலின் விருப்பங்கள் மாற ஆரம்பித்தன. தனது கெட்ட பழக்கங்களை அகற்றினான். ஆவிக்குரிய வாழ்வில் தீவிரமாக இருந்த நண்பர்களுடன் நேரம் செலவிட்டான். ஒரு நாள் மாலையில், அவர்களுடன் சேர்ந்து ஜெபித்த பிறகு, அவனுக்குள் உணர்ச்சி அலைகள் எதுவும் எழவில்லை, ஆனாலும் எல்லாமே மாறிப்போயிருந்தது. ‘நான் எதையும் உணரவில்லை, ஆனால், அதன்பிறகு நான் பழையபடி இருக்கவில்லை’ என்று சொன்னான்.
- பிறகு சீக்கிரமே, தேவன் அவனை எதிர்பாராத வழிகளில் பக்குவப்படுத்தத் தொடங்கினார்.




- ஓர் ஓய்வுநாள் மதிய வேளையில், மிகேல் சலிப்புடன் ஒரு வணிக வளாகத்தில் சுற்றிக்கொண்டிருந்தபோது, முன்பின் தெரியாதவர்களிடம் தேவனைப்பற்றிப் பேசவேண்டும் என்கிற எண்ணம் அவனுக்குள் தோன்றியது. தனக்கு அதற்குத் தகுதியில்லை என்று நினைத்தாலும், அதைச் செய்யத் தீர்மானித்தான். அவன் பேச ஆரம்பித்தபோது, ஒரு காலத்தில் தூரமாகத் தெரிந்த விசுவாசம் திடீரென்று உண்மையானதாக மாறியது. ‘நான் பேசப்பேச தேவனே எனக்குக் கற்றுக்கொடுப்பதுபோல் இருந்தது’ என்று கூறினான்.
- அந்த அனுபவம் அவனது ஊழியப்பணியின் தொடக்கமாக அமைந்தது. உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்குப் பிறகு, ஆஸ்திரேலியாவில் ஒரு மிஷனரி பயிற்சித்திட்டத்தில் சேர்ந்தான். அங்கே, அவனுக்குள் ஒரு திட்டம் உருவானது: தனது சொந்த நாடான ஃபின்லாந்திற்குச் சென்று ஒரு புதிய திருச்சபையை நிறுவ விரும்பினான். 2019 ஆம் வருடத்தில், அவர் திருச்சபை தலைவர்களைத் தொடர்பு கொண்டு, ஹெல்சின்கியில் ஒரு புதிய ஊழியத்தைத் திட்டமிடுகிற பணிகளில் இணைந்தான்.



பிறகு 2020 ஆம் ஆண்டு வந்தது.

- கொரோனா பெருந்தொற்று அவனது திட்டங்களை முடக்கியது. வெளிநாட்டிலிருந்த பெண் தோழியையும் தொடர்புகொள்ள முடியவில்லை. பணவிரயமானது; அது அவனை பெரும் மனச்சோர்வில் ஆழ்த்தியது. தூக்கமில்லாமலும் தனிமையிலும் தவித்த நிலையில், தேவன் தனக்கு ஏன் இவ்வளவு பெரிய நம்பிக்கையைக் கொடுத்துவிட்டு, பிறகு அதை அப்படியே பறித்துக் கொண்டார் என்று கேள்வி எழுப்பினான். ஆனாலும், அந்த இக்கட்டான காலக்கட்டத்திலும் தேவன் அமைதியாக தம் வேலையைச் செய்து கொண்டிருந்தார்.
- ஆகஸ்ட் 2020 இல், ‘ஒய்கோஸ் ஹவுஸ்’ ஊழியம் அங்கு துவங்கப்பட்டது.